தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**ஆணை நாள்.09.06.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 12024/B/2023**

திரு.கே.இளங்கோவன் ... மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்),
மாவட்ட காவல் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்-602 001. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (01.06.2026) அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து காஞ்சிபுரம் சரக காவல்துறை துணைத் தலைவர் (DIG) அலுவலக பொது அதிகார அமைப்பைச் சார்ந்த திரு.R.ஆறுமுகம், SAO அவர்கள் (09.06.2026) இன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி, திரு.கோ.சஷாங் சாய், இ.கா.ப., காவல்துறை துணைத் தலைவர், காஞ்சிபுரம் சரகம், காஞ்சிபுரம் அவர்களின் 08.06.2026 தேதியிட்ட அறிக்கையினை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

2. மேற்கண்ட அறிக்கையில், திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் திருமதி.பத்மஸ்ரீபபி, காவல் ஆய்வாளர் பாலுசெட்டி சத்திரம் காவல் நிலையம் காஞ்சிபுரம் மாவட்டம் முன்னர் திருவள்ளூர் நகர காவல் நிலையம் மற்றும் நிலைய எழுத்தர் திரு.முத்துக்குமார், த.கா.1246 மனவாளநகர் காவல் நிலையம் முன்னர் திருவள்ளூர் நகர காவல் நிலையம் ஆகியோர் மீது தமிழ்நாடு சார்நிலைபணியாளர் (ஒழுங்கு (ம) மேல்முறையீடு) விதிகள் 1955 விதி 3(அ)-இன்கீழ் த.ப.எண்கள்:18&19/2026-ன்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மேலும் மனுதாரர் கோரிய CCTV தரவுகளை பொது தகவல் அலுவலர் பெற்று அவருடைய அலுவலகத்தில் அவருடைய பாதுகாப்பில் வைத்துக்கொள்ள தவறிய செயலுக்கும் இனிவரும் காலங்களில் இது போன்று நிகழ்வுகள் நடைபெறா வண்ணம் செயல்பட எச்சரித்து, பொது தகவல் அலுவலருக்கு "எச்சரிக்கை குறிப்பாணை" வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, இன்று பொது அதிகார அமைப்பின் சார்பாக

ஆஜரான திரு.R.ஆறுமுகம், SAO அவர்களால் ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட நடவடிக்கைகளை ஆணையம் ஏற்று இம்மனுவினை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகின்றது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

<u>வழக்கு எண். **SA 12024/B/2023**</u>

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
   (தலைமையிடம்),
   மாவட்ட காவல் அலுவலகம்,
   திருவள்ளூர் மாவட்டம்-602 001.

2. காவல்துறை துணைத் தலைவர்,
   காஞ்சிபுரம் சரக காவல்துறை துணைத் தலைவர் (DIG) அலுவலகம்,
   காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில்,
   தையார் குளம்,
   வந்தவாசி சாலை,
   காஞ்சிபுரம் - 631501.

3. மேல்முறையீட்டாளர்,
   திரு.கே.இளங்கோவன்,
   எண்.4, இன்ப பில்டிங்,
   ஒருங்கிணைந்த நீதிமன்றம் அருகில்,
   தாலுக்கா காவல் நிலையம் எதிரில்,
   திருவள்ளூர் வட்டம் & மாவட்டம்
   செல்.9500592909.

Copy to: File. GP PC
090626